பக்கம்.

**கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்.**

**அசல் வழக்கு எண்.298/2023**

**வா.சா. –1–சத்திவேல்**

**நாள். 07.10.2025**

**வா.சா.1 இன்று ஆஜராகி சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

சமூகம் நீதிமன்றத்தில் என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் ரூ.50 லட்சம் ரொக்கமாக பிரதிவாதிக்கு கொடுத்து, பிரதிவாதி திருப்ப செலுத்ததால் தாவா வழக்கை தாக்கல் செய்துள்ளேன். பிரதிவாதிக்கு சுமார் 72 வயது இருக்கும் என்றால் சரிதான். நான் ஒரு வழக்கு தாக்கல் செய்தது போல் எனது தகப்பனாரும் இதே பிரதிவாதிக்கு ரூ.65 லட்சம் ரொக்கமாக கொடுத்ததாக அ.வ.எண்.292/2023 தாக்கல் செய்திருப்பது எனக்கு தெரியுமா என்றால் நான் வழக்கு போட்ட பிறகு எனக்கு தெரியும். மேற்படி வழக்கின் விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி வழக்கில் நானும் எனது தகப்பனாரும் ஒன்றாக வந்து போவோம் என்றால் தவறு அந்த வழக்கில் எனது அப்பா சாட்சியம் அளித்த போது என்ன பதில்கள் சொன்னார் என்பது தெரியும் என்றால் சரியல்ல எனக்கு தெரியாது. பிரதிவாதி பாலசுப்பிரமணியன் எனக்கு சொந்தமாக என்றால் சொந்தம் இல்லை அவர் குடும்ப நண்பர் ஆவார். பிரதிவாதி இந்த தாவாவில் எதிர் வழக்குரையில் சொல்லிருக்கும் விபரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். பிரதிவாதி தாக்கல் செய்த எதிருரைக்கு நான் மறுப்புரை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நானும் எனது அப்பாவும் பழக்கனுத்து கிராமம் நரிபட்டியில் ஒரே வீட்டில் குடியிருக்கிறோம் என்றால் சரியல்ல. என் அப்பா தரை தளத்தில் குடியிருக்கிறார், நான் முதல் தளத்தில் வசிக்கிறேன், இருவரும் தனித்தனியாக வசிக்கிறோம். நான் கடன் கொடுத்ததாக சொல்லும் தேதிகளான 24.12.2020 மற்றும் 24.01.2021 ஆகிய இடைப்பட்ட காலத்தில் கொரானா தொற்று அதிகமாக இருந்த காலம் என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ஆவணத்தின் படி பிரதிவாதிக்கு ஒரு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பி இருந்தேன் என்றால்ச ரிதான். அதற்கு பிரதிவாதி 30.08.2023 தேதி வா.சா.ஆ.4 பதில் அறிவிப்பு வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு அனுப்பிள்ளார் என்றால் சரிதான். பிரதிவாதி தரப்பில் அனுப்பிய பதில் அறிவிப்பில் ரொக்கமாக பணம் பெறவில்லை என்றும், தான் கையொப்பம் செய்து புரோநோட்டு எழுதிக்கொடுக்கவில்லை என்றும் சொல்லியுள்ள விபரம் எனக்கு தெரியும். வழக்கு விசாரணையின் போது வா.சா.ஆ.1 புரோநோட்டு பிரதிவாதி தரப்பு ஆட்சேபனைக்குட்பட்டு குறியீடு செய்யப்பட்டுள்ள விபரம் எனக்கு தெரியும். பிரதிவாதி எத்தனை வருடம் எனது குடும்ப நண்பர் என்றால் சுமார் 20 ஆண்டுகளாக குடும்ப நண்பர் ஆவார். பிரதிவாதியின் குடும்ப உறுப்பினர்களையும் தெரியும். பிரதிவாதி எந்த

தேதியில் ரொக்கமாக கடன் கேட்டார் என்ற விபரத்தை தேதியினை குறிப்பிட்டு எனது பிராது அல்லது எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. சொல்லியுள்ளேன். 3 மாதத்திற்கு முன்பு இருந்தே கேட்டதாக சொல்லியுள்ளேன். சிறுக சிறுக சேர்த்து மொத்தமாக கொடுத்தேன். 3 மாதத்திற்கு முன்பு பிரதிவாதி பாலசுப்பிரமணியம் என்னிடம் பணம் கேட்டுள்ள விபரத்தை எனது பிரமாண பத்திரத்தில் சொல்லியுள்ளேனா என்றால் பிராதில் சொல்லவில்லை. என்னிடம் காட்டப்படும் அ.வ.எண்.292/2023 என்ற வழக்கில் வா.சா.ஆ.1ல் ஆவணத்தில் பிரதிவாதியின் பெயர் பாலசுப்பிரமணி என்றும், நான் தாக்கல் செய்துள்ள வழக்கில் வா.சா.ஆ.1ல் பிரதிவாதியின் பெயர் பாலசுப்பிரமணியன் என்றும் இருக்கிறது என்றால் சரிதான். அ.வ.எண்.292/2023 வழக்கின் புரோநோட்டின் சான்று **நகல் பி.வா.சா.ஆ.1** ஆக குறியிடப்படுகிறது. மேற்படி பிரதிவாதி 20 வருடம் குடும்ப நண்பர் என்றும், அவர் தனது பெயரை பாலசுப்பிரமணியன் என்பதில் இருந்து பாலசுப்பிர மணி என்று 20.02.2008 ஆம் தேதியில் அரசிதழில் அறிவிப்பு செய்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. 20.12.2020 முன்பு எனக்கு பிரதிவாதிக்கு கொடுக்கல் வாங்கல் இருந்ததா என்றால் கைமாற்று கடன் கொடுக்கல் வாங்கல் இருந்ததது, அந்த நம்பிக்கையின் பேரில் தான் தாவா கடன் கொடுத்தேன். வா.சா.ஆ.5 ஆவணம் வில்லங்க சான்றிதழில் பிரதிவாதியின் பெயர் பாலசுப்பிரமணி என்று தான் இருக்கிறது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 புரோநோட்டில் உள்ள ரிவனியு ஸ்டாம்பில் உள்ள கையொப்பத்திற்கும், அதன் கீழே உள்ள கையொப்பத்திற்கும் வித்தியாசம் உள்ளதா என்றால் இல்லை. என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணத்தில் பிரதிவாதி பத்திர அலுவலகத்தில் செய்த கையொப்பத்திற்கும் வா.சா.ஆ.1 உள்ள கையொப்பத்திற்கும் வித்தியாசம் உள்ளதா என்றால் இல்லை. பிரதிவாதியின் கையொப்பத்தை நிருபிக்க தடய அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்ப மனு எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. 24.12.2020 ஆம் தேதி பிரதிவாதி என்னிடம் ரூ.50 லட்சம் ரொக்கமாக கடன் கேட்கவில்லை என்றும், நானும் ரொக்கமாக ரூ.50 லட்சம் கடன் கொடுக்கவில்லை என்றால் தவறு. நான் தாக்கல் செய்துள்ள பிரமான பத்திரத்தில் எனக்கு கட்டுமானம், அரசு ஒப்பந்தம், ரியல் எஸ்டேட், விவசாயம் ஆகியவற்றின் மூலம் சம்பாத்திததாக சொல்லியுள்ளேன் அந்த விபரங்களை எனது வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரிதான். மேற்படி வருமானத்தை காட்டக்கூடிய வகைக்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி தொழில்கள் என்ன பெயரில் செய்து வருகிறேன் என்றால் கட்ட தொழிலுக்கு சக்திவேல் என்ற பெயரில் செய்கிறேன். ரியல் எஸ்டேட் தொழில் மற்ற சில நபர்களுடன் சேர்ந்து புரோக்கர் மாதிரி செய்வதால் அதற்கு பெயர் கிடையாது. விவசாயத்திற்கு எனது பெயரில் தான் நிலம் உள்ளது. ஒரு சில கட்ட காண்ட்ராக்டர் வேலையை மற்றவர் பெயரில் இருப்பதை எனக்கு மாற்றி கொடுத்தால் அந்த வேலைகளையும் நான் செய்வேன். ரூ.4 கோடிக்கு

அந்த வேலையை மாற்றி கொடுத்தார் நான் தான் அந்த வேலையை செய்து கொடுத்தேன். அரசு ஒப்பந்தமானது எனது பெயரில் தான் உள்ளது சால்வன்சி எனது பெயரில் தான் உள்ளது. ஒப்பந்தம் என் பெயரில் தான் செய்வேன். மேற்படி தொழில்களுக்கு முறையாக வருமான வரி கட்டுவதுண்டா என்றால் உண்டு. எனக்கு எந்த எந்த வங்கிகளில் கணக்கு உள்ளது என்றால்திண்டுக்கல் பேருந்துநிலையம் அருகில் உள்ள இந்தியன் ஓவர்சீஸ் Fort கிளையில் உள்ளது. பைனான்ஸ் தொழில் செய்கிறேனா என்றால் இல்லை. பழக்க வழக்கத்தின் அடிப்படையில் பணம் கேட்பவருக்கு கொடுத்து உதவி செய்கிறேன். ஆனால் நான் லைசன்ஸ் வாங்கவில்லை. எனது தொழில் மூலமாக வரக்கூடிய அனைத்து வருமானத்திற்கு எனது ஆடிட்டர் மூலமாக கணக்கு பரமாரித்து வருகிறேனா என்றால் வருகிறேன். மேற்படி தொழில்களில் ஒப்பந்த தொழிலில் அரசிடமிருந்து வருகின்ற பணம் என் பெயருக்கு வரும் அது வருமான வரி கணக்கில் கட்டப்படும், மற்ற வருமானங்களான விவசாய வருமானம், புரோக்கர் வருமானம் வருமானத்தில் காட்டமாட்டேன்.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி – ஒத்திவைக்கப்படுகிறது.**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

P VELMURUGAN

Digitally signed by P VELMURUGAN
Date: 2025.10.07 06:19:53 +0530

Additional District and Sessions Judge,

Dindigul.